1979 மார்ச் 17]

திரு. சி. ஆறுமுகம் : தமிழ்நாட்டிலுள்ள கூட்டுறவு சர்க்கரை ஆலைகளில் எந்தெந்த ஆலைகளுக்கு நிதிப் பற்றாக் குறை ஏற்பட்டிருக்கிறது? அதைச் சரி செய்ய அவர்கள் அரசிடத்தில் மானியம் கேட்டிருக்கிறார்களா? எந்தெந்த ஆலைகளுக்கு மானியம் வழங்கியிருக்கிறார்கள்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : 11 ஆலைகள் வருகின்றன. கூட்டுறவு ஆலைகளும், பொதுத் துறை ஆலை களும் இருக்கின்றன. அந்த ஆலைகளில் ஏற்பட்ட நஷ்டம் வருமாறு— ஆம்பூர் 38.88 லட்சம் ரூபாய்; மதுராந்தகம் 103.97 லட்சம் ரூபாய்; அமராவதி 105·08 லட்சம் ரூபாய்; சேலம் 84.33 லட்சம் ரூபாய்; கள்ளக்குறிச்சி 81·79 லட்சம் ரூபாய்; நேஷனல் 140.75 லட்சம் ரூபாய்; தர்மபுரி 74.06 லட்சம் ரூபாய்; வேலூர் 142·31 லட்சம் ரூபாய்; திருப்பூர் 125.01 லட்சம் ரூபாய்; அறிஞர் அண்ணா 32.06 லட்சம் ரூபாய்; ஜவகர்லால் நேரு 73.23 லட்சம் ரூபாய். உடனடி யாக உதவி செய்யலாமா என்று மாநில அரசு யோசித்து 2 கோடி ரூபாய் கடனாக உதவலாமா என்று பரிசீலித்து வருகிறது.

திரு. சி. ஆறுமுகம் : யோசித்துக் கொண்டிருப்பதாக அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். எந்த ஆலைக்கு எவ்வளவு வழங்கப்பட்டிருக்கிறது என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : இன்னும் எந்த ஆலைக்கும் வழங்கப்படவில்லை. வழங்கலாமா என்பதைப் பற்றி அரசு பரிசீலித்து வருகிறது. வழங்குவது என்றால் 2 கோடி ரூபாய் கடனாகத்தான் வழங்கப்படும்.

* வினா எண் 441— திரு. செ. சிவசாமி : மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) முகவை மாவட்டம், மானாமதுரை பகுதியில் கூட்டுறவு சர்க்கரை ஆலை ஒன்று ஆரம்பிப்பதாக அரசுக்கு உத்தேசம் உண்டா?

(ஆ) ஆம் எனில், எப்போது . எந்த இடத்தில் ஆரம்பிக் கப்படும். ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்—

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

(முற்பகல் 9-40)

திரு. செ. சிவசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, கிழக்கு முகவை மாவட்டம் மிகவும் பின்தங்கிய மாவட்டம். கடந்த ஆண்டு இதே கேள்விக்கு நிச்சயமாக மானாமதுரையிலே அதற்குப் பக்கத்திலே கூட்டுறவு சர்க்கரை ஆலை ஆரம்பிக்கப்படுமென்று உறுதி சொல்லப்பட்டது. உண்மையிலேயே அந்தப் பகுதி பிற்பட்ட பகுதி. அங்கே சர்க்கரை ஆலை ஏற்படுத்தப்பட்டால் அதற்குப் பக்கத்திலே இருக்கிற சிலைமான், திருப்பாச்சேத்தி போன்ற பகுதிகள் கரும்பு உற்பத்தி செய்யக்கூடிய பகுதிகளாக இருக்கின்ற காரணத்தால் அங்கே சர்க்கரை ஆலையைக் கொண்டு வருவதற்கு மீண்டும் பரிசீலனை செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, சிவகங்கையிலே அமைக்கப்பட இருக்கும் சர்க்கரை ஆலை தோன்றினால் அந்த விவகார எல்லைக்குள் மானாமதுரையும் சேரும். ஆனால் சிவகங்கையிலே சர்க்கரை ஆலைக்கு வழங்கியிருந்த உரிமத்தை மத்திய அரசு ரத்து செய்துவிட்டது.

புலவர் கா. கோவிந்தன்: தலைவர் அவர்களே, இந்த சர்க்கரை ஆலைகள் பற்றி இங்கே கேட்கப்படுகிற துணைக் கேள்விகளையும் அவைகளுக்கு அமைச்சர்கள் அளிக்கிற பதில்களையும் தமிழ்நாட்டு விவசாயிகள் கேட்டால் கரும்பு பயிரிடுகிற எண்ணத்தையே கைவிட்டுவிடுவார்கள் என்ற அச்சம் ஏற்பட்டிருக்கிறது. ஆகவே அந்த அச்சத்தைப் போக்கக்கூடிய வகையிலே ஏதாவது ஒரு உறுதிமொழியை அவர்களுக்கு இந்த அரசு அளிக்குமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, இத்தகைய பொருளாதாரப் பிரச்சினைகளில் மத்திய அரசு முடிவு எடுக்கிறது. டீகண்ட்ரோல் செய்வது என்ற முடிவை மத்திய அரசு எடுத்தபோது மாநில அரசுகளைக் கலக்கவில்லை. டீகண்ட்ரோல் செய்ததால் சர்க்கரையின் விலை வீழ்ந்துவிட்டது. உற்பத்திச் செலவைவிட ஒரு குவிண்டாலுக்கு 60 ரூபாய் நட்டம் ஏற்படுகிறது. அதனால் உற்பத்தியாளர்களும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். ஆலைகளும் பாதிக்கப்பட்டிருக்கின்றன. இத்தகைய முடிவுகளை மத்திய சர்க்கார் மாநிலங்களையும் கலந்து கொண்டு முடிவு எடுத்தால் இத்தகைய நிலைமைகள் ஏற்படாமல் இருக்கும். பொருளாதாரக் கொள்கையிலே அத்தகைய முறையை கையாண்டால் நாட்டுக்கும் நல்லது. தொழிலுக்கும் நல்லது.

திரு. செ. சிவசாமி: தலைவர் அவர்களே, நாட்டிலே சர்க்கரை உற்பத்தி அதிகமானதால் சிவகங்கையிலே ஆலை ஆரம்பிக்கக் கொடுக்கப்பட்ட லைசென்ஸை கேன்சல் செய்து

இருக்கிறார்கள். பாலுக்குச் சர்க்கரை என்ற நிலைமை வேண்டுமானால் பூர்த்தியாகியிருக்கலாம். ஆனால் கூழுக்கு உப்பில்லை என்ற நிலைமை பூர்த்தியாகவில்லை. ஆகவே மீண்டும் பரிசீலனை செய்து சிவகங்கையிலே ஆரம்பிக்க ஏற்பாடுகளை அரசு செய்யுமா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருப்பித் திருப்பி அதே கேள்வியா ? ஒரு கருத்தை இரண்டு கேள்விகளிலேயும் கேட்பதா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, இருக்கிற ஆலைகளை நடத்துவதே பெரும் கஷ்டமாக இருக்கிறது. நிலமையிலே கொஞ்சம் முன்னேற்றம் ஏற்படுமானால் நிச்சயமாக மீண்டும் நம்முடைய அரசு மத்திய அரசுக்கு மனுப் போடும். இப்போது உப்பைப்பற்றிக் கவலையில்லை. சர்க்கரையைப் பற்றித்தான் கவலை.

பத்திரிகைகளுக்கு அரசு விளம்பரங்கள்

*வினா எண் 442—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு செய்தி அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

1976–77ம் ஆண்டில், அரசு விளம்பரங்கள் எந்தெந்த தினசரிப் பத்திரிகைகளுக்கு, எவ்வளவு மதிப்புள்ள விளம்பரங்கள் தரப்பட்டன ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவர் அவர்களே, அரசுக்குத் கிடைத்த தகவலின் அடிப்படையில் விவர அறிக்கை* ஒன்று அவை முன் வைக்கப்பட்டிருக்கிறது.

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, இந்த விளம்பரங்கள் தரப்பட்ட காலம் நெருக்கடி நிலை காலம். இதிலே ஆங்கிலப் பத்திரிகை என்று 'இந்து' பத்திரிகையிலே ஆரம்பித்து 'அஸ்ஸாம் டிரிபியூன்' வரையிலும் கொடுத்துவிட்டு தமிழ்ப் பத்திரிகை என்று போட்டு 'தினத் தந்தி' யிலே ஆரம்பித்து சுதேசமித்திரன் வரையிலும் தரப்பட்டிருக்கிறதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் இந்த புதிய அரசு பொறுப்பேற்றுக்கொண்டதற்குப் பின்னால் முரசொலி, தீக்கதிர், தினகரன் போன்ற பத்திரிகைகளுக்கும் விளம்பரங்கள் தரக்கூடிய அளவிற்கு கொள்கையை அரசு வகுத்துள்ளதா ? ஆமெனில் அதை அறிவிக்க இயலுமா ?

---

* 521-252ம் பக்கத்தில் இணைப்பு I ஆக அச்சிடப்பெற்றுள்ளது.